
GODependence செய்தி மடல்

True freedom is being dependent on God

ஜனவரி 2025



## வாசிப்போம் சிந்திப்போம் – 3




உலகில் ஆயிரக்கணக்கான மதங்கள் மக்களால் பின்பற்றப்படுகின்றன என பல்வேறு ஆராய்ச்சிகள் உறுதிப்படுத்துகின்றன. பல மதங்களில் அவைகளைப் பின்பற்றுகிறவர்களுக்கான புனித நூல்கள் உண்டு. உதாரணமாக, இந்துக்கள் தங்களிடம் வேதங்கள், புராணங்கள், மற்றும் தத்துவ நூல்கள் உண்டு என கூறுகின்றனர். குர்-ஆன் எங்களுக்கு மிகவும் புனிதமான நூல் என்று முஸ்லீம்கள் கூறுகின்றனர். புத்தரின் போதனைகளை உள்ளடக்கியிருக்கிற திரிபிடகம் என்ற நூல் தங்களுடைய புனித நூல் என புத்த மதத்தினர் சொல்கின்றனர். பல்வேறு மதங்களில் அவர்களுக்கான புனித நூல்கள் இருக்குமெனில், பரிசுத்த வேதாகமத்தின் தனித்தன்மை என்ன? என்று நீங்கள் நினைக்கக்கூடும்.

சிறு புத்தகங்களைக் குறிப்பிடப் பயன்படுத்தும் கிரேக்க வார்த்தையான biblia என்ற மூல வார்த்தையில் இருந்தே பைபிள் அல்லது பரிசுத்த வேதாகமம் என்ற வார்த்தை உருவாக்கப்பட்டது. பழைய ஏற்பாட்டில் உள்ள 39 புத்தகங்களும் நான்கு பிரிவுகளாக வேத அறிஞர்களால் பகுக்கப்பட்டிருக்கிறது: சட்டம் (5), வரலாறு (12), செய்யுள் அல்லது பாடல் (5), மற்றும் தீர்க்கதரிசன நூல்கள் (17). புதிய ஏற்பாட்டில் உள்ள 29 புத்தகங்கள் பின்வருமாறு பகுக்கப்பட்டிருக்கிறது: வரலாறு மற்றும் வாழ்க்கை வரலாறு நூல்கள் (5), நிருபங்கள் (21), வெளிப்படுத்தல் (1). ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரையுள்ள இந்த 66 புத்தகங்களும் ஏறக்குறைய 1500 வருட கால அளவில் ஒருவரையொருவர் சந்தித்திராத 40க்கும் அதிகமான ஆசிரியர்களால் எழுதப்பட்டது. ஒரு பக்கம் மோசே, தானியேல், பவுல் என கல்வியறிவு நிறைந்தவர்கள் மற்றும் உயர்ந்த பதவிகளில் இருந்தவர்களும் மற்றொரு பக்கம் கல்வியறிவற்ற மீனவர்கள் மேய்ப்பர்கள் என் சாதாரணமான மனிதர்களும் பரிசுத்த வேதாகமத்தை எழுதிய ஆசிரியர்களின் வரிசையில் இருக்கிறார்கள். உண்மைதான் என்றாலும் கூட, பரிசுத்த வேதாகமத்தின் தொடர்ச்சித் தன்மை மற்றும் செய்தியில் மாற்றமில்லாது, நிலைத்து நிற்கும் தன்மையானது மிகவும் தனித்தன்மை நிறைந்தது ஆகும்.

தேவனுடைய அன்பு மற்றும் மனிதர்களின் இரட்சிப்பு பற்றிய தேவனுடைய மகாபெரிய திட்டத்தைப் பற்றிய தெளிவான பார்வையை பரிசுத்த வேதாகமம் நம் முன் வைக்கிறது. இந்த தனித்தன்மைக்குக் காரணமாக இருக்கக்கூடிய ஒரே காரணம் என்னவெனில், அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வது போல, “வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால்” அருளப்பட்டவை ஆகும் (2 தீமோ.3:16). மேலும், பரிசுத்தவேதாகமமானது “ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை” (2 பேதுரு.1:21). தேவன் தன் ஜனங்களிடம் பேச விரும்பியதை எழுதும்படி பரிசுத்த ஆவியானவர் மூலமாக தேவ மனிதர்கள் தேவ ஏவுதலால் எழுதும்படிச் செய்தார். இப்படியாக, முழு வேதாகமத்திற்கும் தேவனே ஆசிரியராக இருக்கிறார்.

ஆனால், சில கிறிஸ்தவர்கள் பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசிப்பதற்குப் பதிலாக அவர்கள் விரும்பும் ஒரு சில புத்தகங்களை மட்டுமே வாசிக்க விரும்புகிறார்கள். “என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன், அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள்” என்று தேவன் கூறுகிறார் (ஓசியா 8:12). தேவனை உண்மையாகத் தேடுகிறவர்களுக்கு அவருடைய வார்த்தை அந்நியமானதாக இருக்காது. தேவனுடைய வார்த்தையானது விலைமதிப்பற்ற பொக்கிஷமாக இருக்கிறது. தேவபக்தியுள்ள வாழ்க்கைய வாழ அது உதவுகிறது. அதை நாம் வாசித்து ருசிக்கும்போது, தேன் கூட்டில் இருந்து ஒழுகும் தெளிதேனை விட வேதம் இனிமையானது என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். பரிசுத்த வேதாகமமானது வாசித்து, ஆராயப்பட்டு, மனனம் செய்யப்பட தகுதியான புத்தகம் ஆகும். பரிசுத்த வேதாகமத்திற்கு நாம் கொடுக்கும் நேரமானது ஒருபோதும் வீணாவதில்லை. “கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது” என்று சங்கீதக்காரன் சொல்கிறார் (சங்.19:7). ஒரு புத்தகத்தை எழுதிய ஆசிரியர் அதை வாசிப்பவருடன் எப்பொழுதும் இருக்கிற ஒரு புத்தகமாக, பரிசுத்த வேதாகமம் மாத்திரமே இருக்கிறது. இது பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும்படி நாம் அதைத் திறக்கிற ஒவ்வொருமுறையும் அவ்வாசிப்பனுபவத்தை சுவராசியமானதாக மாற்றுகிறது. எஸ்றாவைப் போல, தேவனுடைய வார்த்தையை வாசிக்கவும், ஆராய்ந்தறியவும், வாழ்க்கையில் கைக்கொள்ளவும் நம்மை நாம் அர்ப்பணிப்போமா? GODependence வேதவாசிப்புச் சவால்கள் இந்த ஆவிக்குரிய பயிற்சியைச் செய்வதான பொன்னான வாய்ப்புகளை உங்களுக்குத் தருகிறது.

தொடர்ந்து வாசிப்போம்....

-சகோ. அற்புதராஜ் சாமுவேல்

### எமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையை கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

### எமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ **GODependence** நாடுகிறது.

**என்னுடைய எல்லா குழப்பங்களிலும் துயரங்களிலும், பரிசுத்த வேதாகமம் எனக்கு வெளிச்சத்தையும் பலத்தையும் கொடுக்கத் தவறியதில்லை. - ராபர்ட் ஈ. லீ**

HAPPY NEW YEAR 2025

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் இந்த செய்திமடல் மூலமாக இந்த புத்தாண்டில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

புத்தாண்டு என்றாலே வாக்குத்தங்களும் தீர்மானங்களும் தான். நாம் எடுத்திருக்கும் தீர்மானங்கள் அனைத்தையும் நாம் நிறைவேற்ற வேண்டும் என்றே நாம் விரும்புகிறோம். அதற்கு நமது சொந்த பக்தியோ சக்தியோ மட்டும் போதாது. அதற்கு தேவனுடைய கிருபையும் பெலனும் அவசியமாகிறது. ‘என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு’ பிலி. 4:13) என்ற பவுலின் வார்த்தைகளை நாமும் உரிமை கொண்டாடி, இந்த வருடத்தில் செய்யவேண்டுமென எடுத்த தீர்மானங்களை நிறைவேற்றிட உற்சாகம் அடைவோம்.

**பெலப்படுத்துகிற கிறிஸ்து:** ‘தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்’ என பிலிப்பியர் 2:13 ல் வாசிக்கிறோம். எனவே இந்த புத்தாண்டு தினத்தில் நல்ல தீர்மானங்களை நாம் எடுக்க நமக்கு உதவி செய்தவர் தேவன். நாம் அவைகளை நிறைவேற்றிடவும் அவர் நம்மை பெலப்படுத்துவார். (Ref. ஏசாயா. 40:29).

**எல்லாவற்றையும் செய்ய:** இந்த வருடத்தில் நான் இதைச் செய்துவிட வேண்டும், அதைச் செய்துவிட வேண்டும் என அனைத்திற்கும் ஆசைப்படுகிறோம். நாம் தீர்மானிப்பது தேவனுடைய சித்தத்திற்கு உட்பட்டதா என்பதை சோதித்தறிய வேண்டும். ‘நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படிகேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்’ (I யோவான் 5:14).

**எனக்குப் பெலனுண்டு:** நல்ல தீர்மானங்களை மட்டும் கொண்டிருந்து கைகளினால் அவைகளை நிறைவேற்ற முயற்சி செய்யாதிருப்போமானால், அந்த நல்ல தீர்மானங்களே நம்மை சலிப்படையச் செய்யும் (Ref. நீதி. 21:25). கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கிறது போல, கிரியையில்லாத தீர்மானங்களும் செத்தவைகளே. நாட்கள் செல்லச் செல்ல, நமது தீர்மானங்களில் தொய்வு காணப்பட்டால், ஏனெனில் நம்மை பெலப்படுத்துகிறவர் கிறிஸ்து என்பதை மனதில் கொண்டு. தினமும் அவரது பெலனுக்காக நாம் அவரது சமூகத்தில் காத்துநிற்க வேண்டியது அவசியமாகிறது. (Ref. ஏசாயா 40:31)

எனவே இந்த வருடத்திலாவது நமது தீர்மானங்களை முழுமையாக நிறைவேற்றிட, நம்மை பெலப்படுத்தும் கிறிஸ்துவின் பாதத்தில் தினமும் அர்ப்பணித்து செயல்படுவோம்; அவ்விதம் செயல்பட்டால், வருட இறுதியில் திரும்பிப் பார்க்கும்போது அதற்குரிய பலனை நாம் அடைந்திருப்போம்.

- டிசம்பர் 16 அன்று சர்வதேச வேதவாசிப்பு தினத்தை சிறப்பாக அனுசரிக்க நாங்கள் பரிந்துரைத்தவைகளில் சிலவற்றை உங்களில் பலரும் தனிப்பட்ட முறையில், குடும்பமாக, குழுவாக, சபையாக செயல்படுத்தியதற்காகவும் GODependence குழுவாக அனுசரித்த நிகழ்வுகளிலும் உற்சாகமாக கலந்துகொண்டமைக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.
- நமது GODependence செய்திமடல்களை வாசித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். ‘வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்’ மற்றும் ‘விளையாடுவோம் வேதாகம விளையாட்டு’ போன்றவைகளில் உற்சாகமாக கலந்து கொள்கிற ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறோம்.
- GODependence ஊழியங்ளுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**

## துதி மற்றும் ஜெபக் குறிப்புகள்

### துதிப்போம்:

1. 2024 ம் வருடம் முழுவதும் ஆண்டவர் நம்மை பாதுகாத்து, வழிநடத்தி வந்த விதங்களுக்காக. தனிப்பட்ட காரியங்களில் / குடும்பத்தில் / வேலை ஸ்தலத்தில் / ஊழியங்களில் அவருடைய கிருபை இம்மட்டும் இருந்ததுக்காக.
2. டிசம்பர் 16 - சர்வதேச வேத வாசிப்பு தினத்தை சிறப்பாக அனுசரிக்க ஆண்டவர் உதவி செய்ததற்க்காக.
3. சர்வதேச வேத வாசிப்பு தினத்தை முன்னிட்டு Mega Online quiz, Children quiz, Readathon போன்ற நிகழ்வுகளை நடத்த ஆண்டவர் உதவியதற்காக.
4. வேத வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்த / உணர்ந்து கொள்ள முன்னெடுக்கப்பட்ட இப்படியான இந்த நிகழ்வுகளுக்காக.
5. ஆங்கிலம், தமிழ் மற்றும் ஹிந்தி ஆகிய 3 மொழிகளிலே கூடுகையை (zoom ல்) நடத்த ஆண்டவர் பாராட்டின கிருபைகளுக்காக.

### ஜெபிப்போம்:

1. டிசம்பர் 16 அன்று Mega Online quiz, Readathon, டிசம்பர் 15 அன்று நடைபெற்ற Children quiz போன்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டு தங்களுடைய பங்களிப்பை அளித்த ஒவ்வொருவருக்காக.
2. ஆங்கிலம், தமிழ் மற்றும் ஹிந்தி zoom கூடுகையிலே வந்து கலந்து கொண்டு தேவனுடைய வார்த்தையை கேட்டவர்களுக்காக.
3. அனைவரும் வேத வாசிப்பின் முக்கியத்துவத்தை குறித்து உணர்ந்து கொள்ள வருகின்ற டிசம்பர் 16, 2025 சர்வதேச வேத வாசிப்பு தினம் அமைய / அது குறித்து அநேகர் அறிந்து கொள்ள ஒவ்வொருவரும் அவரவர் இடங்களில் முயற்சி எடுக்க.
4. GODependence ஊழியத்தில் 2025 ம் ஆண்டிற்கென்று திட்டமிடப்பட்டிருக்கின்ற காரியங்களை செயல்படுத்த ஆண்டவர் ஞானத்தை தர.
5. ஒவ்வொருவரும் வேத வாசிப்பு மற்றும் ஜெபத்தின் மூலமாக தேவனோடு நெருங்கி ஜீவிக்கவும், புதிய வருடத்தில் புதிய கிருபைகளை பெற்றுக்கொள்ளவும்.

**அர்ப்பணம் மற்றும் மனத்தாழ்மையுடன் கூடிய எதிர்பார்ப்புடன் வாஞ்சையுள்ள ஆவியுடன் தேவனுடைய வார்த்தையிடம் வாருங்கள். தேவனை அறிந்து கொள்ளவேண்டும் என்ற தீர்மானம் உள்ளவர்களாக இருங்கள். - A. W. டோசர்**




## உன்னதத்தில் இருந்து வரும் நன்மையும் பரிபூரணமுமான பரிசு

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. (யாக்கோபு 1:17)

“உங்களுக்குக் கிடைத்த வாக்குத்தத்த வசனம் என்ன?”, “இந்த புதிய வருடத்தில் நீங்கள் எடுத்த தீர்மானம் என்ன?” என்ற இந்த இரு கேள்விகளும் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொள்ளும்போது கேட்கும் பொதுவான வழக்கமான கேள்விகள் ஆகும். ஆனால், அந்த வருடத்தின் ஆரம்பத்தில் அறிந்துகொள்வதற்கு மிகவும் ஆவலாக இருந்த இவ்விரண்டு காரியங்களையும் ஒரு சில நாட்கள் அல்லது வாரங்களிலேயே பல கிறிஸ்தவர்கள் மறந்துவிடுகின்றனர் என்பது வருந்தத்தக்கது ஆகும். எனினும், நம் தேவன் உயிருள்ள தேவனாக இருக்கிறபடியால், அவர் இன்றும் நம்முடன் தொடர்ந்து பேசி, நம் வாழ்வில் மிகவும் தீவிரமாக செயல்படுகிறார். நாம் நம் வாழ்வின் தற்போதைய நிலைமையை நினைத்து, ஒரு பிரகாசமான எதிர்காலத்தை எதிர்நோக்குகையில், நம் தேவன் நல்லவர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவரே நம் வாழ்வில் உள்ள எல்லா நன்மைகளுக்கும் காரணர்/ஆதாரம் ஆவார். அப்படியானால், என் வாழ்வில் நான் விரும்பாத கெட்ட காரியங்கள் ஏன் நடக்கின்றன? என நீங்கள் கேட்கக்கூடும்.

இங்கே, அவருடைய நாட்களில் உலகின் பல பகுதிகளில் சிதறி வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு யாக்கோபு தன் நிருபத்தை எழுதுகிறார். அவர்கள் உபத்திரவங்களுக்கு மத்தியில் வாழ்ந்த போது, சோதனைகள், பாவம், மற்றும் தீய காரியங்கள் குறித்த பல கேள்விகளினால் அவர்கள் தடுமாறியிருக்கக் கூடும். அவர்கள் தங்கள் வாழ்க்கையைக் குறித்து “ஏன்” என்று பல கேள்விகளைக் கேட்டிருப்பார்கள். தேவன் இந்த சோதனை அல்லது பாவம் நம்மைக் கறைபடுத்த ஏன் அனுமதித்தார் என்று நாமும்கூட சில நேரங்களில் கேட்கிறோம். தேவன் ஒருபோதும் (பாவ சோதனைகளால்) நம்மை சோதிப்பவர் அல்ல என்று யாக்கோபு உறுதியாக எழுதுகிறார். தேவன் அல்ல, நம் விருப்பங்களே நம்மை தவறாக வழிநடத்தி தவறான காரியங்களைச் செய்யவைக்கிறது. நாம் நம் தீய/தகாத விருப்பங்களை நிறைவேற்றி நம்மைத் திருப்திப் படுத்திக்கொள்ள அனுமதிக்கும்போது, முடிவில் அது நம்மை பாவத்திற்குள் விழச்செய்து, தேவன் நமக்கு உதவுவதில்லை என்று நம்மை நினைக்கவைக்கிறது. “மோசம்போகாதிருங்கள்” என்று யாக்கோபு நம்மை எச்சரிக்கிறார் (யாக்கோபு 1:16). நம் வாழ்க்கையின் இருளில் இருந்து தப்பிப்பதற்காக நாம் வெளிச்சத்தை விட்டு விலகி ஓட முயற்சிக்கக் கூடாது.

நம் வாழ்வில் உள்ள நன்மையானவைகளை அல்லது நம் ஆசீர்வாதங்களை எண்ணிப்பார்க்கும்போது, அவை தேவனிடம் இருந்து வந்தவை என்பதை நாம் அறிந்துகொள்வோம். “நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து” வருகிறது என யாக்கோபு எழுதுகிறார். நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறத் தகுதியானவர்கள் என்பதனால் தேவனிடம் இருந்து ஒரு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டோம் அல்லது சம்பாதித்தோம் என்று நம்மால் சொல்ல இயலாது. தேவன் மிகப் பெரிய கொடையாளர். அவரே நம் ஆசீர்வாதங்கள் அனைத்திற்கும் ஊற்றாகவும், நம் வாழ்வில் உள்ள எல்லா நன்மைகள் மற்றும் ஆசீர்வாதங்களுக்கும் ஆதாரமாகவும் இருக்கிறார். நன்மையான மற்றும் பூரணமான எல்லா ஈவுகளும் தேவனிடம் இருந்தே வருகிறது. பாவச் சோதனைகள் ஒருபோதும் தேவனிடம் இருந்து வருவதில்லை.

தேவன் நமக்குக் கொடுத்த மிகப்பெரிய பரிசு என்னவெனில், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து ஆவார். அவர் “எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற(வர்)” (எபிரெயர் :15). ஆகவே, நாம் தேவனையும் அவருடைய சத்திய வார்த்தையையும் தொடர்ந்து உற்றுநோக்கி கவனிப்போமாக. அவர் ஒருபோதும் மாறாத நித்திய தேவன். அவருடைய வார்த்தைகள் ஒருபோதும் மாறுவதில்லை. “புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும்” என்று வேதம் சொல்கிறது (ஏசாயா 40:8).

நல்ல மேய்ப்பனின் குரலைக் கேட்டு, கீழ்ப்படிந்து, செவிகொடுத்து, அவரைப் பின்பற்றும்போது, அவர் நம்மை அமர்ந்த தண்ணீர்களண்டையில் நடத்துகிறார். நாம் நமக்குத் தேவையான்வைகள் அனைத்தையும் உடையவர்களாக இருப்போம். ஏனெனில், வேதம் சொல்கிறது: “நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.” இதைவிடச் சிறந்த வேறொரு வாக்குதத்தம் உண்டோ?!

நம் தேவன் தம் ஆசீர்வாதங்களை நமக்குக் கொடுக்க விருப்பம் உள்ளவராக இருக்கிறார். நாம் அவரிடம் இருந்து பெற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறோமா?

> “ நாம் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறத் தகுதியானவர்கள் என்பதனால் தேவனிடம் இருந்து ஒரு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டோம் அல்லது சம்பாதித்தோம் என்று நம்மால் சொல்ல இயலாது. தேவன் மிகப் பெரிய கொடையாளர். அவரே நம் ஆசீர்வாதங்கள் அனைத்திற்கும் ஊற்றாகவும், நம் வாழ்வில் உள்ள எல்லா நன்மைகள் மற்றும் ஆசீர்வாதங்களுக்கும் ஆதாரமாகவும் இருக்கிறார். ”

மனிதர்கள் வழிதவறிப் போகமுடியாதபடிக்கு தேவனுடைய வார்த்தையானது அவர்களுடைய பாதைக்கு வெளிச்சம் காட்டாவிடில், அவர்களின் வாழ்க்கையானது இருளும் பனியும் சூழ்ந்ததாக இருந்திருக்கும். - ஜான் கால்வின்

## வேத வாசிப்பு சவால்கள் - 2025




“ஒரு நாளைக்கு அரை மணி நேரம் தேவனுடைய வார்த்தையுடன் நீங்கள் உங்கள் நேரத்தை செலவிட முடியாவிட்டால், உங்கள் வாழ்க்கையை நீங்கள் மறுசீரமைக்க வேண்டும்.” - R. ஸ்டான்லி

**2025 ல் அனுதினமும் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க ஒரு திட்டம்**

புத்தாண்டில் நுழைந்து சில நாட்கள் ஆகிவிட்டன. இதற்கு முன்பு நீங்கள் முழு வேதாகமத்தையும் வாசித்தது இல்லையென்றால், அல்லது 2025 இல் வேதாகமத்தை வாசிக்க என்ன திட்டத்தை பயன்படுத்தலாம் என நீங்கள் யோசித்துக் கொண்டிருந்தால், 01 ஜனவரி 2025 முதல் தொடங்கி நடைபெறும் “வேத வாசிப்பு சவால்களுக்கு” GODependence உங்களை அன்புடன் அழைக்கிறது.

**இதன் சிறப்பு அம்சங்கள்:**

வேத வாசிப்பு சவாலின் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]

10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]

முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேத வாசிப்புப் பகுதி.

வேத வாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.

வேத வாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.

வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!

அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.

பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

**சமீபத்தில் வெற்றிகரமாக வாசித்து முடித்தவர்கள் என்ன சொல்கிறார்கள்?**

“GODependence வேத வாசிப்புச் சவாலில் இணைந்து வேதம் வாசிப்பது என்பது, கடமைக்காக வேதவாசிப்பு என்கிற நிலை இல்லாமல், நேரம் கிடைக்கும் போது என்றும் இல்லாதபடி ஒழுங்குமுறையாக வேதத்தை வாசிக்கவேண்டும் என்கிற மிக சிறந்ததொரு அனுபவமாயிருக்கிறது.” - Sahaya Antony J

“ஒருமுறையாவது பைபிளை முழுமையாக படிக்க வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டேன்; அதற்கு GODependence வேதவாசிப்புச் சவால் எனக்கு மிகவும் உதவி செய்தது.” - C. Gnana Jeya

“GODependence வேதவாசிப்பு சவாலானது வேதத்தை வாசிக்க என்னை உற்சாகப்படுத்தித் தூண்டுகிறது. இது மென்மேலும் வேதாகமத்தை வாசிக்கும் ஆர்வத்தை உண்டாக்குகிறது. GODependence வேதவாசிப்பு சவால் சிரமமில்லாமல் எளிய முறையில் வேதம் வாசிக்கும் வண்ணம் வரையறுக்கப்பட்டு உள்ளது.” - E. Deva Anbu

எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேத வாசிப்புச் சவால்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு **கால அளவுத் திட்டம்** மற்றும் **மொழி**யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் **பெயர்** (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் **வயதை** இந்த இணைப்பில் **https://wa.me/96565962559** கிளிக் செய்து, **+965 6596 2559** என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசிர்வதிப்பாராக. ஆமென்.

**- GODependence குழு**

தேவனுடைய வார்த்தைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். தேவனுடைய வார்த்தைகளை முழு மனதுடன் விசுவாசியுங்கள். - லிசா டெர்கர்ஸ்ட்

## மெகா ஆன்லைன் வேத வினாடி வினா (BIBLE QUIZ)


2024 டிசம்பர் 16 அன்று சர்வதேச வேதவாசிப்பு தினத்தை கொண்டாடும் விதத்தில் மெகா ஆன்லைன் வேத வினாடி வினா (Bible Quiz) நடத்தப்பட்டது. டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்களும் இந்த ஆன்லைன் வேத வினாடி வினா நிகழ்வானது தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டது.

- இதில் ஏறக்குறைய 575 பேர் கலந்து கொண்டனர். தமிழ் மொழியில் சுமார் 487 பேர்களும் ஆங்கிலத்தில் 88 பேர்களும் இதில் கலந்து கொண்டனர். புதிய ஏற்பாட்டில் இருந்து மொத்தம் 25 கேள்விகள் கேட்கப்பட்டன. இந்த ஆன்லைன் வேத வினாடி வினாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் இ-சான்றிதழ்கள் மின் அஞ்சல் மூலமாகவும், தேவைப்பட்டவர்களுக்கு வாட்ஸ் அப் மூலமாகவும் அனுப்பப்பட்டது.

- அத்துடன் அவர்கள் பெற்றுக்கொண்ட இ-சான்றிதழ்களை அவர்களுடைய சமூக வலைதளங்களில் பகிர்ந்து சர்வதேச வேதவாசிப்பு தினத்தை கொண்டாடுமாறு ஊக்குவிக்கப்பட்டனர். அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு பலரும் தங்கள் இ-சான்றிதழ்களை தங்களுடைய சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து டிசம்பர் 16 சர்வதேச வேதவாசிப்பு தினமாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

- இதில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். வரும் ஆண்டில் தமிழ் ஆங்கிலம் மொழிகளோடு சேர்த்து இன்னும் பல மொழிகளில் இந்த ஆன்லைன் வேத வினாடி வினாவை நடத்த விரும்புகிறோம். அதற்கு உங்கள் ஒத்துழைப்பு மற்றும் ஜெபங்கள் தேவை.

**-சகோ. டார்வின் நேசக்குமார், சென்னை**




## BIBLE READATHON – வேதாகம ரீடத்தான் - நீண்ட நேரம் தொடர்ந்து பரிசுத்த வேதாகமத்தை வாசித்தல்




**- திரு. டென்சிங், குவைத்**

- சர்வதேச வேத வாசிப்பு தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, 16.12.2024 அன்று நீண்ட நேரம் தொடர்ந்து பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும் வேதாகம ரீடத்தான் என்ற ஒரு வரலாற்று நிகழ்வை முன்னின்று நடத்த GODependence குழுவினருக்கு தேவன் ஒரு வாய்ப்பைத் தந்தார். வேதாகமத்துடனான ஒரு ஆழமான உறவையும் மற்றும் ஆவிகுரிய வாழ்வில் வளரவும் ஒரு வாய்ப்பை உண்டாக்குவதுமே நீண்ட நேரம் தொடர்ந்து பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும் வேதாகம ரீடத்தான் நிகழ்ச்சியின் நோக்கம் ஆகும்.

- வேதாகம ரீடத்தான் நிகழ்ச்சியானது 16.12.2024 அன்று காலை 8 மணியில் இருந்து மாலை 4 மணி வரைக்கும் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் தனித்தனியே 8 மணிநேரம் தொடர்ந்து நடத்தப்பட்டது. வேதாகம ரீடத்தானில் புதிய ஏற்பாட்டில் இருந்து மத்தேயு நற்செய்தி நூலை வாசிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆங்கிலத்தில் நடந்த வேதாகம ரீடத்தானில் பங்கு பெற்றவர்கள் யோவான் மூன்றாம் அதிகாரம் வரையிலும், தமிழ் வேதாகம ரீடத்தானில் லூக்கா 17ம் அதிகாரம் வரையிலும் வாசிக்க முடிந்தது.

- இந்த வேதாகம ரீடத்தான் நிகழ்ச்சியானது Streamyard என்ற செயலியைப் பயன்படுத்தி GODependenceன் யு-டியூப் சேனல்களில் நேரலை ஒளிபரப்பு செய்யப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து பலரும் வெற்றிகரமாக இந்நிகழ்வில் இணைந்து வேதாகமத்தை தொடர்ந்து வாசிக்க தேவன் கிருபை செய்தார். வேதாகம ரீடத்தான் நிகழ்ச்சியானது இதில் கலந்துகொண்ட ஒவ்வொருவருக்கும் பரிசுத்த வேதாகமம் குறித்தை ஒரு புதிய கண்ணோட்டத்தைக் கொடுத்தது என்றால் மிகையில்லை. வேதாகம ரீடத்தானில் உற்சாகமாக பங்குபெற்ற பலரும் இது வேதாக எஸ்றாவின் அனுபவத்திற்கு ஒத்த ஒரு நிகழ்வாக தங்களுக்கு இருந்ததாக கூறினர்.

- கர்த்தருக்குச் சித்தமானால், வேதாகம ரீடத்தானை பல மொழிகளில் பல்வேறு விதங்களில் நடத்துவதற்கு GODependence குழு ஜெபத்துடன் திட்டமிடுகிறோம்.

- ஆங்கில மொழியில் நடந்த வேதாகம ரீடத்தான் நிகழ்வின் நேரலை ஒளிப்பதிவைக் காண இந்த லிங்க் ஐ கிளிக் செய்யவும். Click Here

- தமிழ் மொழியில் நடந்த வேதாகம ரீடத்தான் நிகழ்வின் நேரலை ஒளிப்பதிவைக் காண இந்த லிங்க் ஐ கிளிக் செய்யவும். Click Here

## சர்வதேச வேதவாசிப்பு தின ZOOM கூடுகைகள்

- 2024 டிசம்பர் 16 அன்று சர்வதேச வேதவாசிப்பு தினத்தை சிறப்பாக அனுசரிக்கும் விதமாக ஆங்கிலம், தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் முறையே மொத்தம் 3 Zoom கூடுகைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஆங்கில Zoom கூடுகையில் Dr. P.C. ஆபிரகாம் (கேரளா) அவர்களும் தமிழ் Zoom கூடுகையில் Rev. Dr. D. B. குலோத்துங்கன் (மகாராஷ்ட்ரா) அவர்களும் மற்றும் இந்தி Zoom கூடுகையில் சகோ. எமர்சன் ஸ்காட் (மகாராஷ்ட்ரா) அவர்களும் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டனர்.







- ஆங்கில Zoom கூடுகையில் Rev. Dr. ராஜாசிங் எலியாஸ், Rev. Dr. J N மனோகரன் மற்றும் சகோ. சாம் K ஜான் அவர்களும் தமிழ் Zoom கூடுகையில் சகோ. வாட்ச்மேன் நீ யோபு அவர்களும் மற்றும் இந்தி Zoom கூடுகையில் Rt. Rev. Dr. பிஷப் அகஸ்டின் சுகுமார் மற்றும் சகோ. வாட்ச்மேன் நீ யோபு அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக தங்களது சர்வதேச வேதவாசிப்பு தின வாழ்த்துச் செய்திகளை பகிர்ந்து கொண்டனர்.

- இந்த நிகழ்வுகளில் GODependence வேத வாசிப்பு சவால்களில் சிறப்பான முறையில் வாசித்துவருபவர்கள் சிலர் தங்களது அனுபவ சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டனர். மேரி ஜோன்ஸ் பற்றிய வீடியோ ஒன்றும் அந்தந்த மொழிகளில் பகிர்ந்து கொள்ளப்பட்டன. இந்த கூடுகைகளில் அந்தந்த மொழிகளில் நடைபெறும் GODependence வேத வாசிப்பு சவால் குழுவின் உறுப்பினர்கள் இந்த கூடுகைகளில் கலந்து கொண்டனர். இதில் பங்கேற்றவர்கள் அனைவரும் வேதவாசிப்பின் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொண்டதுடன் இந்த சர்வதேச வேதவாசிப்பு தினம் குறித்த விழிப்புணர்வை பலருக்கும் கொண்டுசெல்ல தீர்மானம் எடுத்தனர்.




**பரிசுத்த வேதாகமம் வாழ்வதற்கு மிகச் சிறப்பான வழிமுறையையும், பாடுபடுதலின் மேன்மையான வழியையும், மரித்தலின் மிகவும் எளிதான வழியையும் நமக்குப் போதிக்கிறது. - ஃப்ளவல்**





## உங்களுக்குத் தெரியுமா?

### டிஎன்ஏ குறியீட்டின் குறிப்பை பரிசுத்த வேதாகமம் தருகிறது

**சங்கீதம் 139:13-16:** "நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும். நான் ஒளிப்பிடத்திலே உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது."

**மனிதவாழ்க்கையின் எழுதுதல், நெசவு செய்தல் மற்றும் பின்னுதல் ஆகிய உருவகங்கள் பரிசுத்த வேதாகமத்தின் இந்தக் கருத்துடன் அழகாக இணைகின்றன:**

- டிஎன்ஏ இரட்டை ஹெலிக்ஸ் அமைப்பில் "ஒன்றாகப் பிணைக்கப்பட்டுள்ளது".
- ஒரு நபரின் உடல் மற்றும் உயிரியல் அமைப்பையும் அம்சத்தையும் தீர்மானிக்கும் விதத்தில் மரபணு தகவல் எழுதப்பட்டுள்ளது.
- "பிரமிக்கத்தக்கதாகவும் அதிசயமாகவும் உண்டாக்கப்பட்டேன்" என்ற கருத்து மனித வாழ்வின் பிரமிக்க வைக்கும் சிக்கலான தன்மையைப் பற்றி பேசுகிறது, இதை விஞ்ஞானம் தொடர்ந்து அவிழ்த்து வருகிறது.

**காலத்தை மிஞ்சிய அறிவை விளக்கும் இந்த புராதன புத்தகத்தை (பரிசுத்த வேதாகமம்) வாசிப்பது உங்களுக்கு ஆச்சரியமாக இல்லையா?**

**உங்களுக்குத் தெரியுமா?**




13வது நூற்றாண்டில் , ஸ்டீபன் லாங்க்டன் என்பவரால் பைபிள் அத்தியாயங்களாக பிரிக்கப்பட்டது. மேலும் 16வது நூற்றாண்டில் ராபர்ட் எஸ்டீன்னின் என்பவர் மூலம் வசனங்களாகப் பிரிக்கப்பட்டது.



நோவா பேழையின் நீளம் 300 முழங்கள் ஆகும். இது சுமார் 450 அடிகள் அல்லது 137 மீட்டர் நீளம் கொண்டது. (ஆதியாகமம் 6:15)



**நாம் எந்தளவுக்கு குறைவாக வேதாகமத்தை வாசிக்கிறோமோ, வேதத்தை வாசிக்க வேண்டும் என்ற விருப்பமும் அந்தளவுக்கு குறைவாகவே இருக்கும். மிகவும் குறைவாகவே ஜெபிக்கும்போது, ஜெபிக்கும் விருப்பமும் குறைவாகவே இருக்கும். - ஜார்ஜ் முல்லர்**

**16ம் தேதி டிசம்பர்: இந்த நாள் வேத வாசிப்பிற்கான சர்வதேச நாளாகக் கொண்டாடப்படுவதற்கு ஏதேனும் முக்கியத்துவம் உண்டா?**

ஆம், உண்டு... இது மேரி ஜோன்ஸ் என்ற பெண்மணியின் பிறந்த நாளாகும், அவர் 1784ஆம் ஆண்டு டிசம்பர் 16ல் பிறந்தார். அவரின் வாழ்க்கை, பிரிட்டிஷ் மற்றும் வெளிநாட்டு வேதாகம சங்கத்தை நிறுவவும், வேதாகமத்தை அனைவருக்கும் கொண்டு சேர்க்கும் ஒரு இயக்கத்தை உருவாக்கவும், ஊக்கமளித்தது.


மேரி ஜோன்ஸ்

**இந்த மேரி ஜோன்ஸ் யார்? அவருக்கும் வேதாகமத்திற்கும் என்ன தொடர்பு?**

வேல்ஸ் நாட்டின் சிறிய கிராமத்தில், ஒரு எளிய ஆனால் ஆழ்ந்த ஆன்மீக நம்பிக்கையுள்ள குடும்பத்தில் மேரி ஜோன்ஸ் பிறந்தார். வாழ்க்கை எளிதானதல்ல; பொருட்கள் குறைவாக இருந்தன. ஆனால் மேரிக்குக் கொண்டிருந்தது செல்வத்தைக் கூட மிகுதியாகச் செய்கிறது:

தேவனை நேசிக்கும் ஒரு முழு மனது. மெரிய் சிறு வயதிலேயே வேதத்தை தனது சொந்தமாகப் படிக்க வேண்டும் என்ற பேரார்வத்தை வளர்த்துக் கொண்டார். ஆனால் அந்த நாட்களில், வேதாகமங்கள் மிகவும் அரியவையாக இருந்தன, குறிப்பாக அவர் மொழியாக இருந்த வேல்ஷ் மொழியில். மேரியின் வீட்டில் வேதம் ஏதுமில்லை; அவர் கிராமத்தில் ஒரே ஒரு வேதம் இருந்தது, அது பக்கத்து வீட்டுக்காரருக்கு சொந்தமானது. அவர் அவ்வப்போது அதை வாசிக்க அனுமதித்தார்.

அந்த விலைமதிப்பற்ற வார்த்தைகளை வாசிக்க அமர்ந்த போது, மேரியின் ஆர்வம் அதிகரித்தது. அவர் தன் சொந்த வேதத்தை வைத்திருக்க வேண்டும், அதை எப்போது வேண்டுமானாலும் படிக்க வேண்டும், அதை தனது இதயத்தில் பாதுகாக்க வேண்டும் என்று பேரார்வத்துடன் விரும்பினார். ஆனால் ஒரு ஏழை பெண்ணான மேரி எப்படி இவ்வளவு விலையுயர்ந்த பொருளை வாங்க முடியும்? அந்தக் காலத்தில் ஒரு வேதத்தின் விலை ஒரு குடும்பத்தால் அடைய முடியாத அளவிற்கு அதிகமாக இருந்தது. இருப்பினும், மேரி உறுதியுடன் இருந்தார். 9 வயதிலேயே, அவர் தனது வாழ்க்கையை மாற்றும் ஒரு முடிவை எடுத்தார். அவர் சம்பாதிக்கக்கூடிய ஒவ்வொரு காசையும் சேமிக்கத் தொடங்கினார். ஆறு வருடங்கள் முழுக்க அவர் உழைத்து, வேலைகளைச் செய்து, நபர்களுக்கு உதவி செய்து சிறு தொகை பணத்தை சேமித்தார்.

இறுதியில், மேரி 15 வயதாகும்போது, அவள் தேவையான பணத்தைச் சேமித்திருந்தாள். ஆனால் இன்னும் ஒரு சவாலுடன் நேரிட வேண்டும்: வேதம் வாங்க அருகிலிருந்த இடம் பாலா நகரமாகும். அது மேரி வீட்டிலிருந்து 26 மைல் (சுமார் 42 கிமீ) தூரத்தில் இருந்தது. மேரி வேதத்தை வாங்க அந்த மாபெரும் தூரத்தை நடந்து செல்ல வேண்டியிருந்தது.

ஒரு காலை, மேரி காலியடியுடன் தனது பயணத்தைத் தொடங்கினார். கற்களாலும் மரங்களாலும் நிறைந்த பாதைகள் அவளது கால்களுக்கு இடையூறாக இருந்தன. ஆனால் அவள் விடாமல் சென்றாள். அவள் இதயத்தில் ஆர்வமும் உற்சாகமும் நிறைந்திருந்தது. மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் கடந்துவிட்டு, பலா நகரத்தை சென்றடைந்தாள். அங்கே, வேதத்தை பிரச்சாரம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த ஆயர் தாமஸ் சார்ல்ஸின் வீட்டிற்கு சென்றாள்.

மேரி தனது கதையைக் கூறி, சேமித்த பணத்தை அவரிடம் கொடுத்தபோது, ஆயர் சார்ல்ஸ் ஆழ்ந்த உணர்ச்சியில் ஆழ்ந்தார். அவளுக்கு வேதத்தை வழங்குவதற்கு அவரிடம் சில வேதங்கள் மட்டுமே இருந்தன. இருந்தாலும், அவர் மேரிக்காக அதில் ஒன்றை உறுதிசெய்தார்.

முதன்முறையாக மேரி தனது கையில் வேதத்தைப் பிடித்தபோது, மகிழ்ச்சியின் கண்ணீர் அவளது முகத்தில் வழிந்தது. அவளது கனவு நிறைவேறியிருந்தது. மேரி தனது வீட்டிற்கு திரும்பி, தனது வாழ்க்கையின் எஞ்சிய நாட்களில் அன்புடன் படித்து, கற்றுப் பாதுகாத்த அவளது வேதத்தை கொண்டிருந்தாள்.

மேரியின் கதை அதில் முடிவடையவில்லை. அவரின் தாராள மனமும் ஆர்வமும் ஆயர் தாமஸ் சார்ல்ஸை செயல்பட தூண்டியது. அவர் மேரியின் கதையை மற்றவர்களுடன் பகிர்ந்தார். இது வேதாகமம் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வகையில் ஒரு இயக்கத்தை தூண்டியது.

1804ல், இதைத் தொடர்ந்து, பிரிட்டிஷ் மற்றும் வெளிநாட்டு வேதாகம சங்கம் நிறுவப்பட்டது. மேரி ஜோன்ஸ் தனது சொந்த வேதத்தை பெற 26 மைல் தூரம் காலியடியுடன் நடந்து சென்றார். அவர் ஆறு வருடங்கள் சேமித்தார், ஏனெனில் தேவனுடைய வார்த்தையின் மதிப்பை அவர் அறிந்திருந்தார்.

இன்று நமக்கோ, இப்படிப்பட்ட தியாகங்களைச் செய்ய தேவையில்லை. நம் வீட்டில், நம் கைபேசியில், ஏராளமான மொழிகளில் வேதம் இருக்கிறது. ஆனால், நாம்தான் அதை மேரி செய்தபடி மதிக்கிறோமா?

சர்வதேச வேதாகம வாசிப்பு நாளை நாங்கள் கொண்டாடும் போது, மேரியின் கதை நம்மை தேவனுடைய வார்த்தையை வாசிக்கவும், கற்கவும், வாழவும் ஊக்குவிக்கிறது. வேதாகமம் ஒரு புத்தகம் மட்டுமல்ல. இது தேவனின் உயிருள்ள வார்த்தை; நம் பாதைக்கு விளக்காகவும் நம் பாதை வெளிச்சமாகவும் உள்ளது.

மேரி ஜோன்ஸ்'ன் கதை, அவளது சொந்த கதை மட்டும் அல்ல. அது நம் கதையும் கூட. அவளது வேதாகமம் மீதான அன்பு நம்மை தேவனுடைய வார்த்தையின் மீது நம் அர்ப்பணிப்பை புதுப்பிக்கவும், அதன் செய்தியை இன்னும் வெளிச்சத்திற்காக ஏங்கும் உலகிற்கு பகிர்ந்து கொடுக்கவும் அழைக்கிறது.

**மேரி ஜோன்ஸ் வீடியோவை பார்க்க -** Click Here


**தேவனுடைய வார்த்தையானது ஒன்று பரிபூரணமானதும் முழுமையானதுமாக இருக்க வேண்டும் அல்லது பயனின்றி வழக்கொழிந்து போனதாக இருக்க வேண்டும். - வன்ஸ் ஹேவ்னர்**


# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 3

**வேதப்பகுதி: லூக்கா**


குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

## I. என்ன சம்பவம் கூறு?

1 

2 



3 



4 


5 


6 

## II. என்ன வசனம் கூறு


1 


2 

3 

4 

## III. இயேசு கூறியது/கேட்டது

1 

2 

3 

4 


5 

https://forms.gle/TYzWZkRE5spN5zxU8

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 15/01/2025 க்கு முன்பதாக அனுப்பவும்.
சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

**விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 2**

**வேதப்பகுதி: மாற்கு**

**சரியான பதில்களை அனுப்பிய நபர்கள்:**

- கே.லதா லிவிங்ஸ்டன்
- எஸ்.சுமதி
- பி பேர்ல்சன் சாமுவேல்
- ஜெஃப்ரீனா.ஜே
- கவிதா.எம்
- ஜே ஜெர்ஷிகா
- எஸ்.இந்துமதி
- உ. மிராக்கிளின் ஜெஸி
- டி.சலோமி சகுந்தலா ராணி

**சரியான பதில்:- படம் பார்த்து நபர்களை கண்டுபிடி வசன ஆதாரத்துடன். (ஒருவர்/ ஒருவருக்கு மேல்) :**

1.யோவான் (1:3,4) (1:19)
2.சீமோன் (1:16) (3:18) (6:3) (14:3) (15:21)
3.மரியாள் (16:1)
4.யோசேப்பு (15:43)
5.யாக்கோபு (1:19) (3:18) (6:3) (12:26)

**சரியான பதில்:- யாருடைய பொருள் - வசன ஆதாரத்துடன் கண்டுபிடி**

1. தண்ணீர் குடம் - ஒரு மனுஷனுடையது 14:13
2. துப்பட்டி - ஒரு வாலிபனுடையது, யோசேப்பினுடையது 14:51,15:46
3. நளதம் - ஒரு ஸ்திரீயினுடையது 14:3
4. தாலம் - ஏரோதியாளின் குமாரத்தியினுடையது, இயேசுவினுடையது 6:22 - 28,14:20
5. கழுதைக்குட்டி - பெத்தானியா ஊராருடையது 11:1 - 6

**சரியான பதில்:- என்ன உவமை? அதிகாரம், வசனம் சொல்லவும்**

1.விளக்கு 4:21,22
2.வஸ்திரம் 2 - 21,22
3.திராட்சதோட்டக்காரர் 12:1 -12
4.அத்திமரம் 13:28,29
5.வீட்டெஜமான்13:35

நாம் வேதத்தில் வசனங்களைத் தேடி வாசிக்கும்போது, நம் குணநலன் மற்றும் நடத்தை மீது அமர்ந்து நம்மை நியாயம் விசாரிக்கும்படி, நம்மைச் சோதித்தறியும்படி நாம் அவைகளை அனுமதிக்க வேண்டும். - ஜெரி ப்ரிட்ஜஸ்

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

**30 நவம்பர் 2024 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்புச் சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்**

## 1 மாதம்

- சகோ. போருன் சி பிஸ்வாஸ்
- சகோதரி. டோரஸ் ஜி எஸ்
- சகோதரி. ஹெப்சி வில்லிங்ஸ்டன்
- சகோதரி. கே. லதா லிவிங்ஸ்டன்
- சகோதரி. ஆர் பத்மாவதி
- சகோதரி. ஆர்.ஜெயந்தி
- சகோ. ஷண்முகியா. எம்
- சகோதரி. டி. ஹெலன் ஜிஜி
- சகோதரி. வனிதா

## 2 மாதங்கள்

- சகோதரி. அந்துகுல கீர்த்தி
- சகோதரி. அண்ணா ரோஸ்
- சகோதரி. டி. கிரேஸ் ஹெப்சிபா பால்
- சகோதரி. இந்திராணி. எம்
- சகோதரி. எம்.ஜெயா செல்வி முத்துராமன்
- சகோதரி. பி.ஜமுனாராணி
- சகோதரி. பி. மெர்சி தேவபாக்கியம்
- சகோதரி. பி.பவித்ரா
- சகோதரி. ஷெரின் ரஞ்சித்
- சுகிர்தா
- ஜெ. சங்கீதா ஜெனிஸ் சேகர்

## 3 மாதங்கள்

- சகோதரி. டி மாலதி
- சகோ. டேவிட் சாமுவேல்
- சகோதரி. பார்வதி எஸ்
- சகோதரி. ஆர் ராணி
- சகோ. ஸ்டான்லி ஞானராஜ் டி
- சகோதரி. கா.தங்க தமிழரசி
-

## 4 மாதங்கள்

- சகோதரி. டி.எச்.ஜெபசெல்வி
- சகோதரி. ஜே. எல். ஜெர்ஷாஜஸ்டின்
- சகோதரி. ஜெனிஷா ஜே எல்
- சகோதரி எம் ஜோனோபார்க் தாவரங்கள்
- சகோ. எஸ்.தனபால்

## 6 மாதங்கள்

- சகோதரி. ஏ, சலோமி லூசியானா
- சகோதரி. ஏ. ஆக்னஸ் பியூலா கிரேஸ்
- சகோதரி. ஏ. ஜாஸ்மின் தரதி
- சகோதரி. அனுஷ்லின் பெல்சியா
- சகோதரி. D. கோல்டன் ஜெனட்
- சகோ. டி. பிலிப்
- சகோதரி. ஜாஸ்மின் எம் அருள்தாஸ்
- சகோதரி. த.வளர்மதி ஜெயராஜ்
- சகோ. W. சாம்

## 1 வருடம்

- சகோதரி. ஏ.உமாமகேஸ்வரி
- காட்வின் ராஜ்குமார்
- சகோதரி. ஜெஃபினா மிராலின்
- சகோதரி. எல். ஜெனிடா புளோரன்ஸ்
- சகோதரி. லாவண்யா ஆர்
- சகோதரி. டி.பெத்துசெல்வி
- சகோ. டி. சைலஸ் தாசன்

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 2

வேதப்பகுதி: மாற்கு

### சரியான பதில்கள்

➡ இடமிருந்து வலம்
1. மகதலேனா மரியாள் (16:9)
3. திமேயு (10:46)
5. உத்தம (14:3)
6. நாலு (2:3)
9. பெத்பகே (11:1)
11. வரி (12:14)
16. நரகம் (9:43,44)
18. சேவல் (14:72)
23. கோடித்துண்டு (2:21)
25. ஒரு (8:14)
27. யாக்கோபு (1:19)

⬅ வலமிருந்து இடம்
10. யோசே (6:3)
12. பேதுரு (8:29)
14. பந்தி (6:39)
28. பிலிப்பு (6:17)

⬇ மேலிருந்து கீழ்
12. லேவி (2:14)
4. உபத்திரவம் (13:24)
8. பொவனெர்கேஸ் (3:17)
13. ஜீவன் (8:36)
17. இரண்டு (12:42)
19. ஐந்து (6:38)

⬆ கீழிருந்து மேல்
7. ஏழு (16:10)
24. ஒட்டகமயிர் (1:6)
26. கொர்பான் (7:11)
21. மோசே (9:4)
20. ஐம்பது (6:40)
22. லேகியோன் (5:9)
15. ஓய்வுநாள் (2:27)
29. பிணியாளிகள் (2:17)

### சரியான பதில்களை அனுப்பிய முதல் பத்து நபர்கள்:

சகோதரி. பிரேமா சாம்
சகோதரி. ஜெ. சங்கீதா ஜெனிஸ் சேகர்
சகோதரி. M.ஜெயசெல்விமுத்துராமன்
சகோதரி. எ.ஆர். எலிசபெத்
சகோதரி. அ.ஜாய்ஸ் செல்லத்துரை
சகோதரி. T.சலோமி சகுந்தலா ராணி
சகோதரி. J.ஹெப்சிபா
சகோதரி. சுமன் லதா . Y
சகோதரி. சுகந்தி குமார்
சகோதரி. A. உமாமகேஸ்வரி

### ஆசிரியர் குழு

பேதுரு தேவதாசன்
அற்புதராஜ் சாமுவேல்
ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
ஏ. ஆர். பீட்டர்
டெ. டென்சிங்
டார்வின் நேசகுமார் அ
ஷோபா தானியேல்
ஜோசஃபீன் ஷைனி பால்
கேதரின் சுஜி

"நான் பரிசுத்த வேதாகமத்தைப் படிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறேன். நான் இருக்கும் இடத்திலேயே அது என்னைக் கண்டுபிடிப்பதால், இது தேவனுடைய வார்த்தை என்று நான் நம்புகிறேன். - ஆபிரகாம் லிங்கன்"



# யோவன்னாள்

## பயமின்றி இயேசுவைப் பின்பற்றின செல்வ சீமாட்டி (லூக்கா 8:1-3; 24:6-11)

யோவன்னாள் (ஏரோது ராஜாவிடம் காரியக்காரனாக பணிபுரிந்த) சூசாவின் மனைவி ஆவார். அவர் ஒரு பணக்கார பெண் மற்றும் சமுதாயத்தில் நல்ல அந்தஸ்துடன் இருந்த ஒருவராக இருந்திருப்பார் என்பது வெளிப்படை. அசுத்த ஆவிகள் மற்றும் பலவீனங்கள் ஆகியவைகளிடம் இருந்து இயேசு குணப்படுத்திய பெண்களில் யோவன்னாளும் இருந்தாள். அவள் இயேசுவைப் பின்பற்றவும், தன் ஆஸ்திகளால் அவருடைய ஊழியத்தை ஆதரிக்கவும் துணிந்தாள்.

ஏரோது ராஜா இயேசு கிறிஸ்துவின் எதிரியாக இருந்த படியால், யோவன்னாளின் செயல்கள் அவளுடைய கணவரையும் பாதித்திருக்கக்கூடும். இயேசு 'தேசத்துரோக' (யூதர்களின் ராஜாவாக) குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட்டதால் அவரைப் பின்பற்றுபவர்களும் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்படலாம். அவருடைய பதினொரு சீடர்களும் ஓடி ஒளிந்துகொண்டிருந்தபோதும், யோவன்னாளும் மற்ற பெண்களும் இயேசுவைப் பார்க்கும்படி சென்றார்கள். இயேசுவை அடக்கம் செய்த பிறகும், அவரது கல்லறைக்கு வாசனை திரவியங்களுடன் சென்ற பெண்களில் யோவன்னாளும் இருந்தாள்.

**யோவன்னாளின் வாழ்க்கை நமக்கு என்ன கற்பிக்கிறது?**

- இயேசு யோவன்னாளுக்கு விடுதலை கொடுத்தார். அவள் அதற்கு நன்றியுணர்வு உள்ளவளாக, இயேசுவைப் பின்பற்றினாள். பாவங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட நாம் முழு மனதுடன் இயேசுவைப் பின்பற்ற வேண்டும்.
- பின்விளைவுகள் பற்றிப் பயப்படாமல் நாம் இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய வேண்டும்.
- நாம் ஜனங்களுக்கு அல்ல, தேவனுக்கு பயப்பட வேண்டும்,
- கடவுளுடைய ஊழியத்தை ஆதரிக்க நம் செல்வத்தைப் பயன்படுத்த வேண்டும்.
- சமுதாயத்தில் உயர்ந்த பதவியில் இருந்தாலும், இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஏழைகளாக இருந்தாலும் கூட அவர்களுடன் நாம் இணைந்துகொள்ள வேண்டும்.

கர்த்தருக்கு ஊழியம் செய்ய நமக்கு அசாதாரணமான திறமைகள் இருக்க வேண்டியதில்லை. தனது ராஜ்யத்தை விரிவுபடுத்தும் பணியில் அவர் எவரையும் பயன்படுத்தலாம்.

தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுவதற்கே நாம் முதலிடம் கொடுக்க வேண்டும்.

**- சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**

---

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 3

**வேதப்பகுதி: லூக்கா சுவிசேஷம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ■ | | | | | 17 | 18 | | |
| 2 | | | | | | | | 20 | 24 |
| | | 8 | | | ■ | | ■ | 21 | |
| | | | ■ | | 15 | | | | |
| | 6 | 9 | 11 | 13 | | | | | |
| 3 | | 10 | | | 16 | | | 22 | |
| 4 | | | ■ | 14 | | | | | 25 |
| ■ | 7 | | 12 | | | | | 23 | |
| 5 | | | | | | | 19 | ■ | 26 |

**➡ இடமிருந்து வலம்**

2. எலியாவின் ஆவியும் பலமும் உடையவன் யார்? (3)
3. எது பாதாள பரியந்தம் தாழ்த்தப்படும்? (7)
4. ஈசாய் யாருடைய குமாரன்? (3)
5. தாவீதின் ஊர் எது? (5)
7. பழந்துருத்திகளில் எந்த திராட்சரசத்தை வார்த்து வைக்கமாட்டார்கள்? (2)
8. நினிவே பட்டணத்தாருக்கு அடையாளமாயிருந்தது யார்? (2)
11. சகரியாவுக்கு தரிசனமான தூதன் பெயர் என்ன? (5)
12. மரித்த லாசரு தேவதூதரால் யாருடைய மடியில் கொண்டு போய் விடப்பட்டான்? (5)
14. இயேசுவின் கையில் வாசிக்கும்படி கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசன புத்தகம் எது? (3)
15. இயேசு வளர்ந்த ஊர் எது? (5)
18. இவனும் ஆபிரகாமுக்கு குமாரனாய் இருக்கிறானே. எவன்? (3)
23. யோசேப்பு யாருடைய குமாரன்? (2)

**⬅ வலமிருந்து இடம்**

17. சீலோவாமில் கோபுரம் விழுந்ததால் செத்தவர்கள் எத்தனை பேர்? (5)
19. எதைக் கொடுக்க பிதா பிரியமாயிருக்கிறார்? (4)
20. குடிமதிப்பு எழுத கட்டளையிட்டது யார்? (7)
22. தேவனால் உண்டானவன் யார்? (3)
25. பலிபீடத்துக்கும் தேவாலயத்துக்கும் நடுவே கொலையுண்டது யார்? (4)

**⬇ மேலிருந்து கீழ்**

1. லூக்கா இந்த சுவிசேஷத்தை யாருக்கு எழுதுகிறார்? (5)
10. ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்ட குஷ்டரோகிகள் எத்தனை பேர்? (3)
16. ஏரோதின் காரியக்காரன் யார்? (2)
17. புளிப்பில்லாத அப்ப பண்டிகையின் மற்றொரு பெயர்? (3)
21. யார் சோதோமை விட்டு புறப்பட்ட நாளில் அவ்விடம் அழிக்கப்பட்டது? (3)
24. இயேசு நரி என்று யாரைச் சொன்னார்? (3)

**⬆ கீழிருந்து மேல்**

6. மரியாள் ஏறக்குறைய எத்தனை மாதம் எலிசபெத்துடன் தங்கி இருந்தாள்? (3)
9. ஆவியின் ஏவுதலினால் தேவாலயம் வந்தது யார்? (4)
13. யோவான்ஸ்நானனை __ பிடித்திருக்கிறவன் என்றார்கள். (3)
26. சகரியாவின் மனைவி யார்? (6)

**குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.**

https://forms.gle/Wbb7Q1vEhexzjVsu9

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 15/01/2025 க்கு முன்பதாக அனுப்பவும்.சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

**கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும். - ஏசாயா 34:16**

# லூக்கா

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 60 - கி.பி 61
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.மு. 7 - கி.பி.26
**நூலின் ஆசிரியர்:** லூக்கா
**புத்தக வகை :** சுவிசேஷ ம்

## நூல் அறிமுகம்

- மகா கனம்பொருந்திய தெயோப்பிலுவுக்கு இப்புத்தகம் அர்ப்பணிக்கப்படுகிறது. இது நல்ல கிரேக்க மொழிநடையில் அமைந்துள்ளது. தம் காலத்துத் திருச்சபையின் போதனையையும் பணியையும் பற்றி அறிவிக்கும் நோக்கத்தோடு ஆசிரியர் இந்நூலைப படைத்துள்ளார். இயேசுவைப் பற்றிப் பிற நூல்கள் இதற்குமுன்எழுதப்பட்டிருந்தாலும் முறையாகவும் முழுமையாகவும் வரலாற்றுப் பின்னனியோடும் யாவற்றையும் உறுதிபடுத்தும் வகையில் இந்நூலை இவர் எழுதுகிறார் (லூக்1:1-4). பிற இனத்தவருக்கென்றே எழுதுவதால் எபிரேயர் சொல்லாட்சி இந்நூலில் தவிர்க்கப்படுகிறது. எருசலேம் நகரம் தீத்துவால் அழிக்கப்பட்டபோது நிகழ்ந்தவை இந்நூலில் சித்தரிக்கப்பட்டுள்ளன. மாற்கு நற்செய்தி நூலில் காணப்படும் எருசலேம் ஆலயம் பற்றிய தானியேல் மறைபொருள் வெளிப்பாட்டு இலக்கியச் செய்தி எருசலேம் நகர அழிவைப்பற்றிய செய்தியாக மாற்றப்படுகிறது (லூக் 21:5,20; 13:35). எனவே இந்நூல் கி.பி 70-க்கு பின்தான் எழுதப்படிருக்கவேண்டும் என்பது உறுதி.

## சூழலும் நோக்கமும்

- மத்தேயு மற்றும் மாற்கு என்னும் மற்ற இரண்டு சுருக்கமான நற்செய்திகளைப் போலவே இந்த புத்தகத்தின் நோக்கம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் அவர் "பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் நாள் வரை செய்யத் தொடங்கிய" (அப் 1:1-2) அனைத்தையும் வெளிப்படுத்துவதாகும். லூக்காவின் சுவிசேஷம் தனித்துவமானது, அது ஒரு நுணுக்கமான வரலாறு. லூக்காவின் மருத்துவ மனதுடன் ஒத்துப்போகும் ஒரு "ஒழுங்கான" (லூக்கா 1:3) கணக்காக இப்புத்தகம் அமைந்துள்ளது. லூக்காவின் இப்புத்தகம் புறஜாதிகள், சமாரியர்கள், பெண்கள், குழந்தைகள், வரி வசூலிப்பவர்கள், பாவிகள் மற்றும் இஸ்ரவேலில் புறக்கணிக்கப்பட்டவர்களாகக் கருதப்படும் மற்றவர்களுக்கான அவருடைய ஊழியத்தையும், இரக்கத்தையும் வலியுறுத்துகிறது.

## முக்கிய வசனங்கள்

லூக் 2:4-7, லூக் 3:16, லூக் 4:18-19, 21, லூக் 18:31-32, லூக் 23:33-34, லூக் 24:1-3

## புத்தகத்தின் சுருக்கம்

- லூக்கா நற்செய்தியாளர் மீட்பு வரலாற்றை, யோவான் வரை உள்ள இஸ்ரவேல் மக்களின் காலம், இயேசுவின் காலம், திருச்சபையின் காலம் என்னும் முப்பெரும் கட்டங்களாகப் பிரிக்கின்றார் (16:16). உங்கள் மீட்பு நெருங்கி வருகிறது என மீட்பளிக்கும் வருங்காலத்தைக் குறிப்பிட்டாலும் (21:28) இறையாட்சி மக்களிடையே மலர்ந்துவிட்டது (17:21), இப்பொழுதே இயேசுவின் வாழ்வில் நிறைவேறிவிட்டது (1:1, 4:21) என நிகழ்கால மீட்பையே வலியுறுத்துகிறார். இந்நூலில் எருசலேம் உலக மீட்பின் திட்டத்துக்கு மையமாகத் திகழ்கிறது. இந்நற்செய்தி நூல் எருசலேமில் தொடங்கி எருசலேமில் முடிகிறது. இழந்து போனதைத் தேடி மீட்கவே மனுஷகுமாரன் வந்தார் என்னும் கருத்து முதன்மைச் செய்தியாக விளங்குகிறது (19:10). இகழ்ந்து ஒதுக்கப்பட்டப் பாவிகள், பெண்கள், ஏழைகள், சமாரியர் ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றனர். பரிசுத்த ஆவியின் செயல்பாடு, இயேசுவின் இரக்கம், திருப்பணி, மனம் மாற்றம்,பாவ மன்னிப்பு இவற்றால் ஏற்படும் மகிழ்ச்சிஆகியவை வலியுறுத்தப்பெறுகின்றன. ஜெபம், சான்றுபகருதல், பொறுப்புடன் செல்வத்தைப் பயன்படுத்தல், அமைதி பெறுதல், சிலுவை சுமத்தல் ஆகியன சீடததுவத்தின் சிறப்புத் தகுதிகளாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன. லூக்கா நற்செய்தி இயேசுவின் பெற்றோரைப் பற்றி நமக்குச் சொல்லித் தொடங்குகிறது. அவரது உறவினர் யோவான் ஸ்நானகனின் பிறப்பு, மரியாள் மற்றும் யோசேப்பு பெத்லகேமுக்கு பயணப்படுதல், அங்கு இயேசு பிறத்தல், மனந்திருந்திய மைந்தன், ஐஸ்வரியாவான் மற்றும் லாசரு, நல்ல சமாரியன் கதைகள் மூலம் இயேசுவின் பொது ஊழியம் அவருடைய பரிபூரண இரக்கத்தையும் மன்னிப்பையும் வெளிப்படுத்துகிறது. அனைத்து மனித வரம்புகளையும் மீறும் இந்த பாரபட்சமற்ற அன்பை பலர் நம்பினார், இன்னும் பலர்-குறிப்பாக மதத் தலைவர்கள் - இயேசுவின் கூற்றுகளை சவால் செய்து எதிர்த்தனர். அவருடைய எதிரிகள் சிலுவையில் அவருடைய மரணத்தைத் தேடினர். இறுதியாக இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு, தண்டனை விதிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். ஆனால் கல்லறை அவரைப் பிடிக்க முடியவில்லை! அவருடைய உயிர்த்தெழுதல், இழந்தவர்களைத் தேடிக் காப்பாற்றும் அவருடைய ஊழியத்தின் தொடர்ச்சியை உறுதி செய்கிறது.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- லூக்கா ஒரு புறஇனத்தவராக இருந்ததால், மத்தேயுவின் நற்செய்தியுடன் ஒப்பிடும்போது பழைய ஏற்பாட்டைப் பற்றிய அவரது குறிப்புகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளன. மேலும் பெரும்பாலான பழைய ஏற்பாட்டு குறிப்புகள் லூக்காவின் செய்திகளை விட இயேசு சொன்ன வார்த்தைகளில் உள்ளன. சாத்தானின் தாக்குதல்களுக்கு எதிராக தற்காத்துக் கொள்ள இயேசு பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்தினார், "இது எழுதப்பட்டிருக்கிறது" என்று பதிலளித்தார் (லூக்கா 4:1-13). வாக்களிக்கப்பட்ட மேசியாவாக தன்னை அடையாளப்படுத்திக்கொள்ள (லூக்கா 4:17-21) நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க இயலாமை மற்றும் இரட்சகரின் தேவை ஆகியவற்றைப் பரிசேயர்களுக்கு நினைவூட்டினார் (லூக்கா 10:25-28, 18:18-27)

## நடைமுறைப் பயன்பாடு

- லூக்கா நற்செய்தி நம் இரக்கமுள்ள இரட்சகரின் அழகிய உருவப்படத்தை நமக்குத் தருகிறது. ஏழைகள் அவருடைய ஊழியத்தின் முதன்மை மையமாக இருந்தனர். இயேசுவின் காலத்தில் இஸ்ரவேல் மிகவும் வர்க்க உணர்வுள்ள சமூகமாக இருந்தது. பலவீனமானவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு உண்மையில் சக்தியற்றவர்களாக இருந்தனர். குறிப்பாக "தேவனுடைய ராஜ்யம் உங்களுக்கு அருகில் உள்ளது" (லூக்கா 10:9) என்ற செய்தி நம்மைச் சுற்றிலும் உள்ளவர்களுக்குச் சொல்ல வேண்டிய செய்தி. ஒப்பீட்டளவில் செல்வந்த நாடுகளில் கூட—ஒருவேளை குறிப்பாக—ஆவிக்குரிய தேவை மிகவும் மோசமாக உள்ளது. கிறிஸ்தவர்கள் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி, ஆவிக்குரிய ரீதியில் ஏழைகள் மற்றும் ஏழைகளுக்கு இரட்சிப்பின் நற்செய்தியைக் கொண்டு வர வேண்டும். தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிருக்கிறது.

## நூலின் அமைப்பு

1) அர்ப்பணம் 1 : 1 - 4
2) குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் 1 : 5 - 2: 52
3) ஊழியத்திற்குத் தயார் செய்தல் 3 : 1 - 4: 13
4) கலிலேயப் பணி 4: 14 - 9: 50
5) எருசலேம் நோக்கிப் பயணம் 9: 51 - 19 : 27
6) எருசலேம் பணி 19: 28 - 21: 38
7)இயேசு துன்புற்று இறந்து உயிர்தெழுதலும் விண்ணேற்றமடைதலும் 22 - 24

GODDependence

தொகுப்பு: சகோ. A. டார்வின் நேசகுமார்

நாம் பரிசுத்த வேதாகமத்தை வாசித்து தியானிக்கையில், தேவனுடைய சித்தத்தையும் இந்த உலகத்தில் உள்ள அவருடைய ஜனங்களுக்கான அவருடைய திட்டத்தையும் நாம் கண்டுகொள்கிறோம்.

கர்த்தருடைய மகா பரிசுத்தமான நாமம் மகிமைப்படுவதாக. இந்த நாளிலும் உங்கள் நடுவிலே கர்த்தருடைய சாட்சியை பகிர்ந்து கொள்வதிலே நான் மிகுந்த சந்தோஷம் அடைகிறேன். என்னுடைய பெயர் பாஸ்டர் கே. பால் மனோகரன், ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர் என்கிற கிராமத்தில் கர்த்தருடைய ஊழியத்தை செய்து வருகிறேன். GODependence என்கிற இந்த ஊழியத்தோடு எனக்கு ஒரு தொடர்பு ஏற்பட்டதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த ஒரு மாதத்தில் முழு வேதாகமத்தையும் வாசிக்கத்தக்கதான ஒரு பாக்கியத்தை GODependence ஊழியங்கள் எனக்கு ஏற்படுத்திக் கொடுத்தார்கள். whatsappலே ஒரு விளம்பரத்தை பார்த்து நானும் ஒரு மாதத்திற்குள் வேதத்தை வாசிக்க வேண்டும் என்கிற உற்சாகத்தோடு அந்த வேதத்தை வாசிக்க ஆரம்பித்தேன். அதற்கு உதவியாய் இருந்த GODependence ஊழியங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக நான் கர்த்தரை துதிக்கிறேன்.

ஒரே மாதத்தில் அதாவது குறைந்த குறைந்தபட்சம் 45, 44 அதிகாரங்கள் தினமும் வாசிக்க வேண்டும் என்கிற சவாலை ஏற்றுக்கொண்டு வாசிக்க தேவன் எனக்கு உதவி செய்தார் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

நான் ஒரு இந்து குடும்பத்தில் பிறந்து இரட்சிக்கப்பட்டு கர்த்தரால் ஊழியத்திற்கு என்று அழைக்கப்பட்டு கர்த்தருடைய ஊழியத்தை கடந்த 27 ஆண்டுகளாக செய்து கொண்டிருக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அநேக முறை நான் வேதத்தை பல காரியங்களை குறித்து வாசித்திருக்கிறேன். அதிலே முழுமையாக நான் 12 முறை படித்திருக்கிறேன். இந்த 12வது முறை இந்த GODependence ஊழியங்கள் மூலமாக கொடுக்கப்பட்ட அந்த Reading Plan-ல் நான் வாசித்திருக்கிறேன். அதற்காக நான் கர்த்தரை துதிக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாகட்டும்

இந்த GODependence ஊழியங்கள் மூலமாக இந்த வேதத்தை ஒரே மாதத்தில் தினமும் 45 அதிகாரங்கள் 44 அதிகாரங்கள் வாசிக்கும் பொழுது நானும் வேதமுமாகவே இருந்தோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். வேதமும் நானும் வேதத்தோடு இருக்கிற ஒரு அனுபவம் கிடைத்தது. 45 அதிகாரங்கள் வாசிக்கும் போது காலையிலிருந்து சாயங்காலம் வரைக்கும் இதே வேலையாக இருக்கும். பல வேலைகள் குடும்பத்தில் ஊழியத்தில் பல வேலைகள், ஊழியங்களையும் பார்த்துக்கொண்டு இதையும் செய்து கொண்டு வேதத்தை வாசிக்கும் போது அந்த முழு நாளும் அந்த வேதத்தோடு இருக்கிற ஒரு அனுபவம் கிடைத்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அதற்காக நான் கர்த்தரை துதிக்கிறேன்.

என்னுடைய ஊழிய அனுபவத்திலே, இது ஒரு பெரிய சவாலாகவும் ஆசீர்வாதமானதாகவும் இருந்தது. இந்த வேதத்தை ஒரு மாதத்துக்குள் வாசித்து முடிக்கிறபோது எனக்குள்ளே அநேக மாற்றங்களை நான் உணர்ந்தேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அந்த வேதத்தை வாசிக்கும் போது அநேக வெளிப்பாடுகள் எனக்கு வந்தது. அது மாத்திரமல்ல, அந்த வேதத்தை வாசிக்கும் போது அநேக மனநிலையிலே இருக்கிற சில குழப்பங்கள் பிரச்சனைகள் இதெல்லாம் மறந்துவிட்டு தேவனோடு வேதத்தோடு நேரத்தை செலவழிக்கிற ஒரு நேரம் கிடைத்ததற்காக நான் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாகட்டும்.

இந்த GODependence ஊழியங்களில் மூலமாக எங்களுக்கு கொடுத்த அந்த பைபிள் ரீடிங் போர்ஷன்ஸ் பார்த்தீங்கன்னா ரொம்ப ஆச்சரியமானதாக ஒவ்வொரு பகுதியாக பிரித்து பிரித்து கொடுத்திருந்தார்கள். ஆதியாகமம், நாளாகமம், சங்கீதம், நீதிமொழிகள், புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் என்று பிரித்து பிரித்து கொடுத்திருக்கும் போது, வாசிப்பதற்கு இன்னும் ஈசியாக, வாசிப்பதற்கு ஆர்வமாகவும் இருந்தது. அதற்காக நான் கர்த்தரை துதிக்கிறேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இந்த குறிப்பிட்ட இந்த வேத வாசிப்பு முறை மிக சிறப்பானதாக இருந்தது. என்னுடைய வாழ்க்கையில் அநேக மாற்றங்களை கண்டுகொள்ள முடிந்தது. விசேஷமாக ஊழியக்காரர்களாகிய நாங்கள் பல்வேறு அலுவல்களிலே எங்களுக்கு வேதத்தை வாசிப்பதற்கு நேரம் கிடைக்காமல் அலைந்து கொண்டிருப்போம். பைபிளை எடுக்கிறதே பிரசங்கத்தை தயார் பண்றதுக்கு தான் பைபிள் எடுத்து வாசிப்போம். அந்த மாதிரி சூழ்நிலைகளில் சில நேரங்களில் நாங்கள் சிக்கிக் கொள்வோம். ஆனால் GODependence ஊழியங்களோடு இணைந்து ஒரு மாதத்தில் முழு வேதத்தையும் படிக்க தேவன் கிருபைசெய்ததற்காக நான் கர்த்தருக்கு நன்றி சொல்லுகிறேன். GODependence ஊழியங்களை கர்த்தர் இன்னும் ஆசீர்வதிப்பாராக. விசேஷமாக இந்த பரிசுத்த வேதம் என்பது கர்த்தர் நமக்கு கொடுத்த பெரிய கிருபை. இந்த வேதத்தை நாம் அதிகமாய் நேசிக்க வேண்டும் வாசிக்க வேண்டும்.

யோவான் ஐந்தாம் அதிகாரம் 39வது வசனம் சொல்லுகிறது "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் இவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு என்று எண்ணுகிறீர்களே" என்று இயேசு சுவாமி சொல்லியிருக்கிறார். இயேசு சாமி சொன்னது போல இந்த வேதத்தை ஆராய்ந்து நேசித்து வாசித்து அதை கைக்கொள்ளுகிறவர்களுடைய வாழ்க்கையிலே நித்திய ஜீவன் நிச்சயமாய் உண்டு என்பதை இந்த வசனங்கள் நமக்கு சொல்லிக் கொடுக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அது மாத்திரமல்ல, வெளிப்படுத்தல் 1:3 வாசிக்கிறோம் "இந்த தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவர்களும் கேட்கிறவர்களும் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்". ஆகவே இந்த வேதத்தை நேசியுங்கள்! வாசியுங்கள்!! இது உங்கள் வாழ்வில் ஆசீர்வாதத்தை கொண்டுவரும். நித்திய ஜீவனை கொண்டுவரும். தேவனுக்கே மகிமை. God Bless You All. ஆமென்

**மேலும் சாட்சிகளுக்கு கீழ்க்கண்ட YOUTUBE இணைப்புகளை கிளிக் செய்து பார்க்கவும்**

- **வேதாகமத்தை படிக்க படிக்க தேவனோடு பயணம் செய்கிறேன்** -SIS. JANE HEXIBAH
- **தேவ சத்தத்தை வேத வசனத்தின் மூலமாக கேட்கிறேன்** -SIS. KALAVATHY ELUMALAI
- **வேதாகமத்தை வாசிக்க வாசிக்க எனக்குள்ளாக மாற்றம் ஏற்பட்டது** - SIS UMA MAHESHVARI
- **வேதாகமத்தை வாசித்து முடித்த திருப்தி எனக்கு கிடைத்துள்ளது** -SIS. SIS. CRISANCIA ANIE
- **வேதாகமம் வாசிக்க நேரத்தை அதிகரித்த போது, Social Media ஈடுபாடு குறைந்து விட்டது** -SIS. S. ANITHA RUTH

நான் பரிசுத்த வேதாகமத்தை கடமைக்காக வாசிப்பதில்லை. இயேசு என் சிறந்த நண்பராக இருப்பதாலும், அவரைப் பற்றிய அனைத்தையும் அறிந்து கொள்ள விரும்புவதால் நான் வேதாகமத்தை வாசிக்கிறேன். - பெயர் அறியப்படாதவர்

## சிறுவர் வேதாகம வாசிப்புச் சவால் 2023-24 க்கான பரிசுகள்



2023-24ம் வருட சிறுவர் வேதவாசிப்பு சவால் (Children BRC) குழுக்களில் சுமார் 250 க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் தினமும் கொடுக்கப்படும் வசனங்களை வாசிப்பதுடன் ஒவ்வொரு வாரமும் சில வசனங்களை மனனமும் செய்து வந்தனர். 3 பருவங்களுக்கான மனன வசனங்களை ஒப்புவித்தல் போட்டிகள் நடத்தப்பட்டன. இந்த மனன வசன போட்டிகளில் கலந்துகொண்ட 14 நபர்களுக்கும், வாராந்திர வினாடி வினாக்களில் ஒழுங்காக கலந்துகொண்ட 28 நபர்களுக்கும் டிசம்பர் 2024 இறுதியில் பரிசுகள் வழங்கப்பட்டன.



## வேத தியான குழுக்கள் (BMG) - 2025



ஆகஸ்ட் 2020 மற்றும் ஜூலை 2022 ல் முறையே ஆரம்பித்து ஒரு வருடத்திற்கு நடைபெற்ற வேத தியான குழுக்கள் (BMG) தற்போது மீண்டும் 2025 ஜனவரியில் ஆரம்பித்து தொடர்ச்சியாக நடத்தப்பட திட்டமிடப்பட்டன. சில தவிர்க்க முடியாத நடைமுறை காரணங்களினால் அவை ஏப்ரல் 2025 இல் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. இவைகளில் கலந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கான பயிற்சிகள் மார்ச் 2025 ல் நடைபெறும். இது குறித்த தகவல்கள் அடுத்ததடுத்த இதழில் இடம்பெறும். இதற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## சர்வதேச வேதவாசிப்பு தினம் (IDBR) – 16 டிசம்பர்

**16 டிசம்பர் 2024 அன்று 2 வது சர்வதேச வேதவாசிப்பு தினத்தினை GODependence Team வெகு விமரிசையாக கொண்டாடியது...**

- 16 டிசம்பர் அன்று தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் தனித்தனியான சிறப்பு Zoom கூடுகைகள் நடத்தப்பட்டன.
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தனித்தனியாக ஆன்லைனில் மெகா வேதாகம வினாவிடை நிகழ்வு நடைபெற்றது. அதற்கான இணைப்பு டிசம்பர் 15 & 16 ஆகிய இரு தினங்களில் செயல்பாட்டில் இருந்தது.
- தங்கள் சமூக வலைத்தள பதிவுகளை பகிர்வதற்கென WhatsApp பயன்படுத்துபவர்களுக்காக டிசம்பர் 16 அன்று மட்டும் செயல்படும் ஒரு தற்காலிக IDBR வாட்சாப் குழுக்கள் ஆங்கிலம், தமிழ் மற்றும் இந்தி ஆகிய 3 மொழிகளில் உருவாக்கப்பட்டன. அதில் பலரும் தங்களது IDBR சமுகவலைத்தள பதிவுகளைப் பகிர்ந்தனர்.
- இந்த IDBR வாட்சாப் குழுக்களில் டிசம்பர் 15 ஞாயிறு அன்று தமிழ் மற்றும் ஆங்கில குழுக்களில் சிறுவர்களுக்காக வேத வினாடிவினா நிகழ்வுகள் நடத்தப்பட்டன.
- 16 டிசம்பர் 2024 அன்று தங்கள் பிறந்தநாளைக் கொண்டாடியவர்களுக்கு சர்வதேச வேதவாசிப்பு தின ஹேஷ்டேக்குகளுடன் வாழ்த்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டன.
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஆன்லைனில் 8 மணி நேர தொடர் வேதவாசிப்பு நிகழ்வுகள் (Bible Readathaon) ஒரே நேரத்தில் நடத்தப் பட்டன.




FOLLOW US!

GODependence வேதவாசிப்பு சவால்கள்

+965 6596 2559 GODependence

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence - தமிழ்

GODependence

GODependence

தொடர்பு முகவரி:
**GODependence Trust**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

**பரிசுத்த வேதாகமத்தைப் புரிந்துகொள்வதற்கு எளிதான வழிமுறை என்னவெனில், வேதத்தில் உள்ள ஒவ்வொரு வரிகளிலும் தேவன் பேசுகிறார் என்ற உண்மையை ஏற்றுக்கொள்வது ஆகும். - டொனால்டு கிரே பர்ன்ஹவுஸ்**